**அனுப்புநர்**

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக்கல்வி
அலுவலர்கள்.

**ந.க.எண். 027369 /NMMS /2022** **நாள் : 25.01.2022**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – தேசிய வருவாய் வழி மற்றும் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்வு, மார்ச் 2022 – பள்ளி மாணவர்களின் விவரங்கள் பதிவேற்றம் செய்தல் மற்றும் DGE இணையதளத்தில் தேர்வுக் கட்டணம் செலுத்தக் கோருதல் – தொடர்பாக.

**பார்வை** இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம். நாள். 21.01.2022

*********

05.03.2022–ல் நடைபெறவுள்ள தேசிய வருவாய் வழி மற்றும் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்விற்கு விண்ணப்பித்த எட்டாம் வகுப்பு பள்ளி மாணவர்களின் விவரங்களை சம்பந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர்கள் www.dge.tn.gov.in என்னும் இணையதளம் மூலமாக 24.01.2022 முதல் 05.02.2022 வரை பதிவேற்றம் செய்யலாம் என்ற விவரத்தினை தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து பள்ளிகளுக்கும் தெரிவிக்கும்படி பார்வையில் காணும் கடிதத்தின் படி அறிவுறுத்தப்பட்டது. தேர்வு கட்டணத்தை ஒரு தேர்வருக்கு ரூ.50/– வீதம். www.karuvoolam.tn.gov.in இணையதளத்தில் செலுத்துமாறும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது, தேசிய திறனாய்வுத் தேர்வினை (NTSE) போலவே தேசிய வருவாய் வழி மற்றும் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்வு (NMMS) க்கும் **DGE PORTAL ல் ONLINE ல் விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யும் போது தேர்வுக்கட்டணத்தை செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.** எனவே, அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களும் DGE PORTAL ல் இணைப்பிலுள்ள வழிமுறைகளை பின்பற்றி தேர்வுக்கட்டணத்தை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், பதிவேற்றம் முடிந்தவுடன் Summary Report மற்றும் தேர்வுக் கட்டண விவரத்தினை (PAYMENT RECIEPT) (ஒரு தேர்வருக்கு ரூ.50/– வீதம்) சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலர்களிடம் 09.02.2022–க்குள் ஒப்படைக்குமாறு அனைத்து பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு அறிவுரை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஒம்/–**

**இயக்குநர்**

**இணைப்பு.**

- EMIS மூலம் பதிவேற்றம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதற்கன வழிமுறைகள்

**நகல்.**

1. **அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்**
2. **அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.**

**– தகவலுக்காகவும், தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.**